# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

## அசல் வழக்கு எண் 32/2023

பெயர்:**ரம்யா** நாள்:21.11.2025

வா.சா.1 – பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – ரம்யா - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் : 12:55</u>

தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால், 1 ஏக்கர் 18 ½ சென்ட் ஆகும். தாவா சொத்தின் சர்வே எண். என்ன என்றால், சர்வே எண். 524 ஆகும். பட்டா எண். என்ன என்றால், 3473 ஆகும். ஆதியில் தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால், எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்டது. அவர் தாவா சொத்தை கிரயத்திற்கு வாங்கினார். எப்பொழுது என் தாத்தா தாவா சொத்தை கிரயம் பெற்றார் என்றால், 1999 வருடம் ஆகும். அதன் கிரய நகலை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன், என்னுடைய தாத்தா இன்னும் உயிருடன் தான் இருக்கிறார். எங்களுடைய குடும்பத்திற்கு பாகப்பிரிவினை மூலம் தாவா சொத்து எனது தகப்பனாரான பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது. பாகப்பிரிவினையானது 07.12.2011 ம் ஆண்டு ஏற்பட்டது. எனது தகப்பனார் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினை மூலம் வந்த சொத்து அவருடைய தனி சொத்து என்றால், சரியல்ல. எனது தகப்பனார் பிரதிவாதியுடைய தனி சொத்து என்பதால் அவர் அதை விற்கவோ, வில்லங்கம் செய்யவோ பிரதிவாதிக்கு உரிமை உள்ளது என்றால், சரியல்ல, பூர்வீக சொத்தில் எனக்கும் என்னுடைய சகோதரிக்கும் உரிமை உள்ளது. பாகப்பிரிவினை மூலம் பிரதிவாதிக்கு கிடைக்கப்பெற்ற சொத்தானது தனி சொத்தே தவிர பூர்வீக சொத்து ஆகாது என்றால், சரியல்ல. ஆகவே நானும், 2-ம் வாதியும் தாவா சொத்தில் உரிமை கோரி பங்கு கேட்க முடியாது என்றால், சரியல்ல. நான் 2-ம் வாதி மற்றும் என்னுடைய தாயார் மூவரும் என்னுடைய தாத்தா மதியழகன் வீட்டில் குடியிருந்து வருகிறோம் என்றால், சரிதான். எத்தனை ஆண்டுகளாக என்னுடைய தாத்தா மதியழகன் வீட்டில் குடியிருந்து வருகிறோம் என்றால், சுமார் 3 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறோம். அதற்கு முன்பாக என்னுடைய தந்தை பிரதிவாதி வீட்டில்

குடியிருந்து வந்தோம். தாவா சொத்தை என்னுடைய தந்தை பிரதிவாதி தான் பராமரித்து உழவடை செய்து வருகிறார் என்றால், சரிதான். ஆகவே அவர் சுவாதீனத்தில் இருந்து வரும் தாவா சொத்தை கூட்டு அனுபவத்தில் இருந்த மாதிரி இந்த அசல் தாவாவை தாக்கல் செய்வது சட்டப்படி தவறு என்றால், சரியல்ல. ஆகவே நான் தாக்கல் செய்த தாவா மேற்கூறிய காரணங்களுக்காகவே தள்ளுபடி செய்ய வேண்டியது என்றால், சரியல்ல. என்னுடைய தகப்பனார் தாவா சொத்தை தவிர்த்து வேறு சொத்துக்களை கிரயம் பெற்று உள்ளார் என்றால், சரிதான். இரண்டு கிரய பத்திரங்கள் மூலம் சொத்துக்களை கிரயம் பெற்றுள்ளார். இரண்டு கிரயம் பத்திரங்கள் மூலம் பெற்ற சொத்துக்களின் விஸ்தீரணம் என்ன என்றால், 3 ஏக்கர் 45 சென்ட் ஆகும். அப்பொழுது கிரயம் பெறும் போது என்னுடைய தாயார் அவருடைய பெயரில் கிரயம் செய்து தருமாறு கோரினார் என்றால், சரியல்ல என்னுடைய தாயாரின் திருமணத்தின்போது அவருக்கு கொடுத்த நகைகளை வைத்துதான் என்னுடைய தகப்பனார் பிரதிவாதி மேற்கூறிய இரண்டு கிரய பத்திரங்கள் மூலம் பெற்ற சொத்துக்களை வாங்கினார். பிரதிவாதி என்னுடைய தாயார் பெயருக்கு கிரயம் செய்து கொடுக்க மறுத்தாரா என்றால், சரியல்ல என்னுடைய தாயார் அதுபோல் கேட்கவில்லை. பிரதிவாதி கிரயம் செய்து கொடுக்க மறுத்ததால்தான் என்னுடைய தாயார் என்னையும் 2-ம் வாதியையும் அழைத்துகொண்டு என்னுடைய தாத்தா மதியழகன் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால், சரியல்ல, என்னுடைய தகப்பனார் வேறு இரு பெண்களுடன் தகாத உறவில் இருந்ததால் அவர் எங்களை வீட்டை விட்டு அடித்து வெளியே அனுப்பிவிட்டார். என்னுடைய தாயாரின் நகைகளை வைத்து மேற்கூறிய இரண்டு கிரய பத்திரங்கள் மூலம் சொத்துக்களை என்னுடைய தகப்பனார் பிரதிவாதி வாங்கினார் என்று நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. என்னுடைய தாவாவில் நகைகளை வைத்து மேற்கூறிய இரண்டு கிரய பத்திரங்கள் மூலம் சொத்துக்களைப்பற்றி கூறவில்லை என்றால், கூறியுள்ளேன். என்னுடைய தாத்தா மதியழகனின் தூண்டுதலின் பேரில் என்னுடைய தாயார் என்னுடைய தகப்பனார் பிரதிவாதியிடம் சொத்துக்களை அவர் பெயரில் எழுதிவைக்க சொல்லி கேட்டார் என்றால், சரியல்ல. என்னுடைய தாத்தா மதியழகனின் சொத்து என்னுடைய தகப்பனார் வாங்கிய சொத்துக்களின் ஒட்டினார் போல் இருப்பதால் அதை அடைய வேண்டும்

என்பதற்காக என்னுடைய தாயாரை தூண்டுதல் செய்து பிரதிவாதியிடம் தகராறு செய்தார் என்றால், சரியல்ல. பிரதிவாதி மறுத்ததன் காரணமாக நாங்கள் எங்கள் தாத்தா வீட்டிற்கு சென்றுவிட்டோம் என்றும் பிரதிவாதி எங்களுடன் சேர்ந்து வாழவேண்டும் என்பதற்காக பஞ்சாயத்துதாரர் மூலம் கேட்டும் நாங்கள் ஒன்றாக சேர்ந்து வாழ மறுத்துவிட்டோம் என்றால், சரிதான், என்னுடைய தகப்பனார் பஞ்சாயத்து நடந்து இரண்டு நாட்களுக்குள் விவாகரத்து அறிவிப்பு என்னுடைய தாயாருக்கு அனுப்பினார் ஆகையால், நாங்கள் அவருடன் சேர்ந்து வாழவில்லை. பஞ்சாயத்துதாரர்கள் சேர்ந்து பேசியும் நாங்கள் சேர்ந்து வாழ மறுத்ததால் பிரதிவாதி சங்ககிரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எங்களுக்கு எதிராக புகார் அளித்தார் என்றால், சரிதான் ஆனால் நாங்கள் ஒன்று சேர்ந்து வாழுவதாகதான் கூறினோம். நாங்கள் காவல் நிலையத்திலும் எங்களுடைய தகப்பனாருடன் சேர்ந்து வாழமாட்டோம் என்று கூறியதால்தான் அவர் என்னுடைய தாயாருக்கு விவாகரத்து அறிவிப்பை அனுப்பினார் என்றால், சரியல்ல. பஞ்சாயத்து எப்போது நடைபெற்றது என்றால், டிசம்பர் 2022 தேதி சரியாக நியாபகம் இல்லை. வழக்கறிஞர் அனுப்பிய விவாகரத்து அறிவிப்பு எந்த தேதியில் வந்தது என்றால், சரியாக நியாபகம் இல்லை. பஞ்சாயத்து நடந்து இரண்டே நாட்களில் விவாகரத்து அறிவிப்பை என்னுடைய தகப்பனார் என்னுடைய தாயாருக்கு அனுப்பினார் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. ஆகையால்தான் பலமுறை ஒன்று சேர்ந்து வாழ அழைத்தும் நாங்கள் மறுத்துவிட்டதால் எங்களுடைய தகப்பனார் சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து வழக்கை தாக்கல் செய்தார் என்றால், சரியல்ல. பிரதிவாதி மலங்காட்டைச் சேர்ந்த ராஜேந்திரன் மகள் பவுனாயாள் என்பவரை திருமணம் செய்து புவனேஸ்வரி என்ற பெண் குழந்தை இருப்பது பொய் என்று சொன்னால், சரியல்ல பஞ்சாயத்து பேசி பவுனாயாளை விவாகரத்து செய்ய ரூ.80,000 ஐ என்னுடைய தகப்பனார் பிரதிவாதி அவருக்கு கொடுத்தார். அதுபோல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. **வா.த.சா.ஆ.4** மற்றம் **வா.த.சா.ஆ.5** ஆவணங்கள் வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல. மேற்கூறிய இரண்டு ஆவணங்களும் நகல் என்பதாலும் அதில் நாங்கள் தரப்பினாராக இல்லாததனாலும் குறியீடு செய்தது தவறு

என்றால், சரியல்ல, அசல் ஆவணத்துடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டது. பவுனாயாளுக்கு பின்னிட்டு என்னுடைய தகப்பனார் பிரதிவாதி பிரியா என்பவருடன் தகாத முறையில் இருந்ததாக கூறுவது தவறு என்றால், சரியல்ல. மேற்கூறிய இரண்டு பெண்களிடமும் என்னுடைய தகப்பனார் பிரதிவாதி தகாத உறவில் இருப்பது சம்பந்தமாக பிரதிவாதியின் பெற்றோர்களிடம் நாங்கள் கூறியபோது அவர்கள் என்னுடைய மகன் ஆண்பிள்ளை என்பதால் எத்தனை பெண்களுடனும் தகாத உறவில் இருப்பார் என்றும் அதை நாங்கள் கேட்ககூடாது என்று நான் என்னுடைய பிரமாண பத்திரத்தில் கூறியுள்ளது பொய் என்றால், சரியல்ல. ஆகையால் தகாத உறவில் இருந்ததாக கூறுவதும் எங்களை அவர் கொடுமை செய்தார் என்று கூறுவதும் பொய் என்றால், சரியல்ல. எங்களுக்கு தாவா சொத்தில் பங்கு கேட்க உரிமை இல்லை என்றும் இந்த தாவா நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் : 1:45</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.11.21 16:20:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.